539

ல்லைச் செந்தமிழ் மாலை : மலர். க.

மேக மாலை

[மேக சஞ்சாரத்தின் இயற்கை வருணனை]

கே. என். சிவராஜ பிள்ளை பி. ஏ.

எஸ். முத்தைய பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

1927 விலை 4 அணா.

ERANIAH PRESS, TINNEVELLY.

0-,1X
N27.
177029

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1927
MADRAS

முகவுரை.

தமிழ்மொழியின் காவியமண்டலம் விரிவுடையதாயிருப்பினும் சில முக்கிய கவி இனங்களை ஆங்கு இன்னும் காண முடியாதிருக்கின்றது. காவியங்களும், புராணங்களும், கலம்பகம் கோவை அந்தாதி முதலிய பிரபந்தங்களும் நிறைந்து பிரகாசிக்கும் நம் தமிழ்மாதின்மெய் இயற்கைப் பொருள் வனப்பைப்பற்றிய கவிக்கோவைகளால் இன்னும் அலங்கரிக்கப்படாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதே. விரிந்த தொடர்நிலைச்செய்யுள்களில் ஆங்காங்குச் சிற்சில இடங்களில் இயற்கை வருணனை அடங்கியிருப்பினும் அவை யாவும் ஆற்றில் கரைத்த புளியேபோல் போதிய அளவு வாசிப்போரின் உள்ளத்தைக் கவர்ந்து அவர்களுக்கு இனிப்பூட்டக் காணோம். மேலும், அவ் வருணனைகள் அந்த அந்தக்கதாசந்தர்ப்பங்களில் எழுந்தனவே அன்றி இயற்கை அழகிலேயே கவிஞர்களின் மனோதர்மம் ஈடுபட்டு அதனையே கூறிமுடிக்கும் முகத்தால் எழுந்தனவல்ல. ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளை நம் தாய்மொழியோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து முற்கூறிய மொழிகளில் இயற்கை வருணனைக்கவிகள் பற்பல கவிஞர்களால் பல்வேறு சந்தங்களில் புனையப்பட்டு இலகி நிற்பதை நாம் காணலாம். நற்கலையின்பாற் படும் காவியப்போக்கில் மத உண்மைகளும், தத்துவ ஆராய்ச்சியும், சன்மார்க்க போதனைகளும் உயர்தரமாகிய கலைஇன்ப உணர்ச்சியை அளிக்கவேமாட்டா. அவ்விதமாய கலைஇன்ப உணர்ச்சியோ இயற்கை அழகிலேயே நின்று எழுந்து கவிஞர்களின் கற்பனாசக்தியோடு கலந்து பரிணமித்து நமது உள்ளத்தைக் கொள்ளைகொள்கிறதை அறியாதார் யார்? இவ்வுண்மையை உணர்ந்தும் நமது தாய்மொழிக்கு இயற்கைவருணனைக் கவிகள் இல்லாக்

குறைபாட்டை ஒருசிறிது நீக்கக்கருதியும் இந்த மேக மாலை என்னும் சிறு நூலை இயற்றி அச்சிடலாயினேன்.

இதுவரையும் தமிழில் இயற்றப்பட்டிருக்கும் சந்தப் பாக்கள் போலல்லாது இது ஒரு புதுரீதியில் இயற்றப்பட்டிருப்பதை வாசிப்போரே எளிதில் அறிந்துகொள்ளலாம். ஒரு செய்யுளில்தானே உணர்ச்சி வேறுபாடுகளைக் குறிக்கப் பல சந்தங்கள் விரவிவரத் தமிழில் கவிஇயற்றி இருப்பதாக நான் இதுகாறும் அறிந்ததில்லை. செய்யுள் இலக்கணங்கட்குள் அமைந்து கவிஞர்கள் அங்ஙனம் கவிபுனையாது விடுத்தனரோவென்றும் ஐயுறுகின்றேன். ஆயினும் நான் அறிந்த அளவில் செய்யுள் இலக்கணம் அதனை நிராகரித்துத்தள்ளுவதாகவும் கொள்ள இடமில்லை. இவ்விஷயத்தில் சிறிது உட்புகுந்து விசாரணை செய்வோமானால், "இலக்கிய வளர்ச்சி கவிஞரின் உயரிய மனோதர்மத்தைப் பொறுத்தது; இலக்கணவுள்ர்ச்சியோ இலக்கிய வளர்ச்சியைப்பொறுத்தது" என்னும் அரிய உண்மை வெள்ளிடைமலைபோல் விளங்குவதை அறிவோம். இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டே இக் கவியின் செய்யுள்கள் ஒவ்வொன்றிலும் பலவேறு சந்தங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்துவரும்வண்ணம் ஒரு புதிய வண்ணக்கவி அமைத்துள்ளேன். இக் காரணம்பற்றியே இவ்வகைக்கவிரசனைக்கு "சந்த தரங்கம்" என்று ஒரு புதுப்பெயரும் சூட்டப்பட்டிருக்கின்றது. இதனைத் தமிழுலகத்தார் ஆதரித்து அங்கீகரிப்பார்கள் என்று மிக்க ஆவலோடு நான் எதிர்பார்க்கிறேன்.

நாகருகோவில்
12-3-1926. } கே. என். சிவராஜபிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

மேகமாலை.

O-1x N27

177029

I.

சந்தம் க.

1\. i வானம் ஆனமை தான வீதியில்
வாவுமா எனத் தாவிச் செல்லுவேன்,
மலையின் சாரல்மேய் கலைஇனம் விரி
வலைதவிர்ந்தெழு விசையும் புல்லுவேன்,

ii மலையில் கெல்லுவேன், மணலை மெல்லுவேன்,
அலையில் *தல்லுவேன், அகிலம் வெல்லுவேன்!

iii கான மான் திர ளான தாவினில்
கருதியே சிறுதுளி சிதறுவேன்,
காற்றி லேவரு சீற்றம் சீறிய
கூற்றின் கைஅகப் பட்டுக் கதறுவேன்!

iv காலை உதறுவேன், கை பதறுவேன்,
வேலை அதறுவேன், மின் விதறுவேன்.

2\. i நீல மோ இருட் சால மோஆல
காலமோ எனும் கோலம் மேவியே,
நிருதர் செங்கட்டி எருது போற் பலர்
பொருது பல்வித விருது கூவியே,

*தல்லுவேன்—அடித்துச் சதைப்பேன் என்னும் பொருள்படும்
ஒரு திசைச் சொல்.

ii தாக்கலோ பிடி கோக்கலோ அடித்
தூக்கலோ இடித் தாக்கலோ பொடி

iii ஏது தான்செய லாதவரென
மோதமே காளம் ஊதமே இடி,
இடித்துச் சிகரமே பொடித்துச் சோலையை
ஒடித்துச் சேர்உயிர் குடித்துப் போம்படி.

iv எற்றி ஆடுவேன், வெற்றி பாடுவேன்,
சுற்றி ஓடுவேன், வாகை சூடுவேன்.

3. பூவின் மெல்லிய காவியோ மயிற்
றாவியோ என ஆவி ஆகிக் கண்
புலப்படாமல் ஓர் வலைப்படாமல் சார்
மலைப்படாம் என் மூடலைப் பெருது விண்
கால் தவழும் பாங்குழவி போலவே
மேல் தவழ் விளையாட்டுச் சாலவே
கார் என எழில் சாரவே பைய ஊரல் ஆயினேன்
சாதல் ஆயினேன்
கஞ்சம் துஞ்சுறக் கொஞ்சமும் பாம் நெஞ்சுரு
விதம் கெஞ்சும் வாயினேன்
மேனி குழையக் கண் நாணப் பொத்துவேன்
வேனில் விழையும் பெண் பானல் முத்துவேன்:

II.

சந்தம் உ

1. நடை பற்பல நான் தந்திடும் விதம் வந்திட
எவர் முந்துவர்?
படைபற்பல *அதிசய்த்திட கதிசென்றுறின்
எதிராகுமோ?—சிலகாலே.

---

* அதிசயித்திட

சந்தம் ௩.

i நத்தை போலக்கல்
பொற்றை மலைகளில்
தத்திஏறி நான்
பற்றிப் பிடிப்பனே; — ஒ சிலகாலே.

ii விரையும் வெடிக்குண்டின்
நிரையின் செலவென
கரை கொள்ளா விசைத்
திரையில் துடிப்பனே; — ஒ சிலகாலே.

iii பாயும் கால் இலா
தோயும் காலையும்
தேயும் காவில் ஆம்
தோயம் கால்வனே; — ஒ சிலகாலே.

iv கண்ணை மூடிக்கான்
நண்ணி யோகிடை
எண்ணை விட்டசை
வண்ணார் போல்வனே;— ஒ இவையன்றி.

சந்தம் ௪.

3. சாரைப் பாம்பு போல் நேராய்ப் பாய்வனே
தண்ணீர்ப் பாம்புபோல் வளைந்து ஆய்வனே —
ஒ உடன் தானே.

சந்தம் ௫.

i சடசட என்று சாடுவேன்,
படபட என்று ஓடுவேன்,
மடமட என்று பாடுவேன்,
தடதட என்று ஆடுவேன்;*— மேல்ஸ்டிராம் போல்

* நார்வே தேசப்பக்கத்தின் கடலில் ஓர் நீர்ச்சுழியின் பெயர்.

ii விருவிறென்றுமே சுற்றுவேன்,
வேண்டும் பொருள் எலாம் பற்றுவேன்,
வேண்டாம் அவை என எற்றுவேன்,
வினை எலாம் செய்து முற்றுவேன்; — இதனால்
அனுத்

சந்தம் ௬.

3. தேங்கி ஏங்கி விண்வாங்கி மாலைபோல் தூங்குவேன்
சோர்ந்து தூங்குவேன்
ஏம்பலில் சேய்போல் தேம்பியழுது கண்
வீங்குவேன் - துயர் - வீங்குவேன்.

சந்தம் ௭.

குரல் ஒய்ந்து குழறுவேன்
நிறம் தேய்ந்து விளறுவேன்
பரல் ஆய்ந்து *கழறுவான்
திறல் வாய்ந்த உளறுவான் — ஆக்கி

சந்தம் ௮.

அன்னான் சொன்னநாள்
துன்னா முன்னமே
மின்னால் மாகத்தைப்
பொன்னா ஆக்கி நான்

சந்தம் ௯.

வேழம் போலக் கறுத்துத் தடிப்பேன்
கோளரி போலக் குமுறி இடிப்பேன்

சந்தம் ௰.

அண்டம் பொடிபட உதட்டினால்
கண்டம் வெடிபட அதட்டிநான்

---

* சோதிடன்

சந்தம் ௰௧.

என் சத்தியைக் காட்டுவேன்
மின் சத்தியை நாட்டுவேன்.

III.

சந்தம் ௰௨.

1. மாக்கள் ஜாதகம் ஆக்கச்சோதிடர் வாக்கை
நம்பிடும் போக்குளார்
நீக்கமில் என தூக்கம் சோதிடப்
பாக்கள் ஆக்கிடார் மேற்குளார்.

சந்தம் ௰௩.

i உள்ளணுத்
தள்ளுற
எள்ளரு
ஒள்ளுருக் கொண்டுளஎன்
பண்டுளமின் — அணுவாகி.

ii ஒவ்வொரு
அவ்வணு
செவ்விதின்
கவ்விட சான்றிடுமால்
தோன்றிடுகால் — அணுவாகி.

சந்தம் ௰௪.

வாயுவே உரன்
மேவியே ஒளிர்
தூவிபோல் உருத்
தாவியே தளிர் ஆவிகெழுமோர்
வாவிஎழுநீர் — அணுவாகி.

சந்தம் ౧௫.

i நளிர் சிந்துறு
வளி வந்திட
மொழி தந்திடும்
எழில் முந்துறும் நீர்த்த விண்டலம்
போர்த்த கொண்டலின்
— துளியாகி.

ii துளிபற்பல
ஒழுகிற்றென
பொழியத்தடம்
இழியும் தரம் கொண்டே மேதினி
பண்டேமூடிடும் — கடலாகி.

சந்தம் ౧௬.

2. கடல் வாய் நின்றெழும் அமுதமோ? பல
உடல் வாய் நின்றெழும் உயிர்கொலோ? பூ
மடல் வாய் நின்றொலி மட்டதோ? தேன்
தொடைவாய் நின்றொலி தொய்யலோ?
எனும் — சொல்லோத.

சந்தம் ౧௭.

முன் - கசிவு ஆயினேன் சிறிதுநாள்
பின் – பொசிவு ஆயினேன் சிறிதுநாள்
வறு - தூவலாயினேன் சிறிதுநாள்
சிறு - தூறலாயினேன் சிறிதுநாள்
அரும் – சாரலாயினேன் சிறிதுநாள்
பெரும் - தாரையாயினேன் சிறிதுநாள்
யானை – மாரியாயினேன் சிறிதுநாள்
சோனை - மாரியாயினேன் கடைசி நாள்;

சந்தம் ௰௯.

ஹா! ஹா! என்னைப்போல்
யாவர் ஆகிற் பார்?
ஹா! ஹா! பொன்னைப்போல்
யாரைப் புகழ்கிற் பார்?

IV.

சந்தம் ௰௬.

1. முகில் எனும் நாமம் அகில லோகத்தும் திகில்
தருமென்பதை எவர் சொலார்
தகையுறு நாவால் உரைதரு பாவால் மிகுமிசை
தந்தவர் அளவிலார்.

சந்தம் ௨௰.

'கொண்டல்' ஆயினேன் இசைகொண்டதால்
'எழிலி' ஆயினேன் எழில் எய்தலால்
'ஊரி' ஆயினேன் விசைத்தூர்தலால்
'இளையும்' ஆயினேன் இன்னிளைத்தலால்

சந்தம் ௨௧.

மஞ்சு மிஞ்சலால் 'மஞ்சா'னேன்
மாலும் சால்வதால் 'மாலா'னேன்
விண்டு அண்டலால் 'விண்டா'னேன்
மேனி கறுத்தே 'காரா'னேன்.

சந்தம் ௨௨.

செல்வம் விளைத்தலால் 'விளை'வென்றார்
பல்வித கனத்தால் 'கனம்' என்றார்

சந்தம் ௨௩.

'விண்'ஆனேன் விண்ணில் வாழ்வதால்
'வான்' ஆனேன் பீடு வாய்தலால்

சந்தம் உ௪.

மாசற்று - நான் - 'மாசா'னேன்
செல்லற்று - நான் - செல்'லானேன்

(சந்தம் ௰௬.)

2. என்பெயர் பொன்பெயர் என்றே எண்ணி
மன்பதையாவும் மயங்குமே
முன்பெயர் வெண்ணி என்பெயர் நண்ணி
அன்பில் பலபொருள் வயங்குமே

(சந்தம் ௩.)

i மாந்தர் பலரும் ஏ
மாந்து போம்படி
சாந்துணை என் பேர்
தான்துணை என்ன நோய்கள் அளவில வந்தன.

ii 'மேக காந்தி'யும்
'மேக வெட்டை'யும்
'மேக சூலை'யும்
'மேக படல'மும் மேதினிக்கயர் தந்தன
—ஆயினும்:

(சந்தம் ௰௫.)

நோய் கோடியும்
வாய் மூடிட
தாய் மூலிகை
யாய் சிற்சில.

சந்தம் உ௫.

காடு அடுத்தேன்
பூடு கொடுத்தேன்
பாடு படுத்தேன்
சூடு தடுத்தேன் — இவையோடு

சந்தம் உகூ.

i ‘மேகவருணை’ (1) தந்ததெந் தன்கருணை,
‘மேகமா நாதம்’ (2) என்னருட் பிரசாதம்,
‘மேகமந்தாரம்’ (3) என்னன்பு சிந்தாரம்,
‘மேகமார்வத்துவம்’ பரமாணுதத்துவம்;

ii ஏகசாரமாய் வந்து பொற்பூரும்
‘மேகசார’மே அந்தக் கற்பூரம்;

iii மண்ணில் ‘அம்புஜம்’ என்னும் பூச்சேந்தேன்
விண்ணில் ‘மேகஜம்’ என்னும் முத்தீந்தேன்.

சந்தம் உஎ.

3. மோனம் பூண்டனர் கானம் ஆண்டனர்
மோதம் தேண்டினர் கீதம் வேண்டினர்
இசை நயந்தனர் இசை மாந்தினர்
இனிய தேடினர் கனியப் பாடினர்.

சந்தம் உஅ.

கீதப்பெருமை ஓதல் எளிதோ?
நாதத் தருமை பூதத்துளதோ? அதனாலே.

(சந்தம் உகூ)

i ராகப் பெயரையும் நான் புனைந்தேனே,
நாகத் தவரையும் நான் முனைந்தேனே;

ii பண்ணில் வரும் ‘மேகராகக் குறிஞ்சி’
விண்ணில் வருமோ? வரா ‘மேகரஞ்சி’

(1) அறிவு
(2) மலைப்பச்சை
(3) மந்தாரச்சிலை (ஒரு மருந்துக்கல்)

(சந்தம் ம)

பாட்டில் எற்குள நாட்டத்தால்
பாடும் குயிற் பெயர் 'மேகமே'- வானம்
பாடிப் புள்பெயர் 'மேகமே.'

சந்தம் உகூ.

4. i என் வருணத்தினால் இலக்குமி கேள்வன்
என்றுமே 'மேக வண்' ணென வருவன்;
பொன்வரு உலகப் புரவலன் தானும்
புகழ்'மேகவாகனன்' எனப் பெயர் பெறுவன்

ii இந்திரனைப்பிணி தந்த இராவணி
ஏந்துவன் 'மேக நாத'னென் நாமம்;
விந்தைக் கவிமொழி 'காளமேக'க் கவி
விருதொடு கொண்டுளன் வெற்றியந் தாமம்;

iii ஆரியப் புலவனும் அரும் காளிதாசன்
யாருமின்றியோ எனை அனுப்பினன் தூது?
சீரியப் புலவருள் புலவராம் தேவர்
செப்புமென் புகழினுக் கொப்புமை ஏது?

சந்தம் ௩௰.

தென்தமிழ் வேதம் என் புகழ் ஓதும்
திறத்தை அறியார் அறியாரே,
அறத்தைக் குறியாக் குறியாரே;
வள்ளல் வகுத்தவர் எள்ளல் மிகுத்தவர்,
வழங்கல் மேம்பா டறியாரே,
விளங்கலாம் பதம் குறியாரே.

சந்தம் ௩க.

5. i மைந்தர்கள் சிந்தை கசிந்திட
பைந்தொடி யார்குழற் பந்தரில்

வந்து புகுந்த இருட்கெதிர்
எந்த விதம் உரை தந்தனர்?

ii உள்ளத் துயரினைத் தள்ளவே
வெள்ளி பொன்மணி கொள்ளவே
அள்ளியே வீசுவள் ளற்கெதிர்
உள்ளி உரைத்தும் யாரையே?

(சந்தம் ௬.)

யாரும் என்னெழில் ஏத்திச் சூடினர்,
யாரும் என் கொடை போற்றிப் பாடினர்;
என்றாலும்

சந்தம் ௯௨.

'கைம்மாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ
உல'கென்னும் நாயனார்

(சந்தம் ௰.)

உரையை யானும் நயந்தேனே உளம்-
கரைய மெச்சி வியந்தேனே.

V.

(சந்தம் ௰௯.)

புகையெனும் கரிய சிகைமுகம் சரியும்
வகை ஒப்பாரியும் விரிப்பனே
பகையென மண்ணில் புகுமிடர் எண்ணி
மிகைபட மின்னிச் சிரிப்பனே

சந்தம் ௯௯.

i யாரோ ஆரியர்? யார் அனாரியர்?
யாரோ சீரியர்? யார் இழிபூரியர்?

ii யாரோ மேலார்? யாரோ கீழார்?
யாரோ நல்லார்? யாரோ பொல்லார்?

iii யாரோ கற்றார்? யாரோ கல்லார்?
யாரோ உற்றார்? யாரோ செற்றார்?

iV யாரோ பெரியர்? யாரோ சிறியர்?
யாரோ பறியர்? யாரோ வறியர்?

V யாரோ நாட்டார்? யாரோ காட்டார்?
யாரோ தீரர்? யாரோ பீரர்?

சந்தம் ௩௪.

i யாரும் சின்னாள் ஊரும் வாழ்வைப்
பேரும் நீர் புற்புதமே போல
பாரும் பதியும் சீரும் திதியும்
தீரும் தீரும் மெய்யே சால;

ii எண்ணில் உயிர்க்கிம் மண்ணே ஏற்ற
இடுகா டோடு சுடுகா டாமே
கண்ணிற் காணும் காட்சி அனைத்தும்
காலன் வாய்க்கோர் கவளமாய்ப் போமே:
— ஐயோ!

(சந்தம் ௩௧.)

i எத்துணை உயிர்கள் பிறந்தன?
பிறந்தும் பிறவி துறந்தன?

ii எத்துணை நாடுமுன் னேறின?
ஏறிப் பின்தடு மாறின?

iii எத்துணை ஊர்கள் இலங்கின?
எமன்கைப் பட்டுக் கலங்கின?
எத்துணை கோட்டை எழுந்தன?
எழுந்தும் இருப்பற் றழிந்தன?

(சந்தம் ௰௬.)

i எத்துணை கொத்தளம், எத்துணை கோபுரம்,
எத்துணை கோயில் இறந்தன?
எத்துணை மாளிகை, எத்துணை சூளிகை,
எத்துணை சாளிகை பறந்தன?

ii எத்துணை யந்திரம், எத்துணை தந்திரம்,
எத்துணை மந்திரம் அழிந்தன?
எத்துணை மூலை, எத்துணை சாலை,
எத்துணை வேலை கழிந்தன? ஐயோ!

(சந்தம் ௰௪.)

எங்கு நோக்கினும் எமன் கூத்தே
இவ்வுலகமோ பெரும் ஏமாற்றே!

VI.

சந்தம் ௯௫.

1. i கரண்டம் போல் இருண்டுமேல் வரண்ட
விண்டுப் பாந்தள்போல்
புரண்டு கண்டோர் மிரண்டுபோகத்
திரண்டுருண்டு சுருள்வனே;

ii வண்டரண்டம் மண்டிருள் உட்கொண்டுதாவ
அண்டர் செய்
விண்டென் ஓம குண்டில் எழுப் புண்டவாறு,
உருள்வனே;

சந்தம் ௯௬.

i ஞாலத்தில் இந்திர
சாலத்திற் கரு
கூலமாம் திரைச்
சாலம்போல் — தூங்குவேன், தூங்குவேன்;

ii திரங்கல் சால்விண்
டரங்கத்தில் பண்
டரங்க வாரி
இரங்கிற்றே என — எங்குவேன், எங்குவேன்;

iii ஜீவராசிகள்
யாவும் நேசிதம்
தோயும் பால் கொடு
தூய என் மடு — வீங்குவேன், வீங்குவேன்;

iV முண்டகத் தடம்
மண்டுபே ரெழில்
அண்டமே கவ்வி
கொண்டிட நவ்வி—தாங்குவேன், தாங்குவேன்;

(சந்தம் ௩எ)

துன்னிய துயர் நீங்குவேன்,
(நான்) மின்னியே சிரித்தோங்குவேன்;

(சந்தம் ௩அ)

2. i சந்திரன் தவழுறத் தொட்டிலாய்ச் சமைவேன்,
இந்திரன் விசைத்தெழ ரதமென அமைவேன்;

ii மின்னல் பாம்பொளி முழையும் ஆவேன்,
முன்னும் போர்மதன் முரசும் ஆவேன்;

iii வான்கடல் எறிந்த மலையலை ஆவேன்,
மீன்கடல் மிதந்த மீன்பட காவேன்;

(சந்தம் ௩கூ)

3. i வானத்தில - யுத்த
தானத்தில் கமை
வாரமோ? கூ
டாரமோ?

ii மாகத்தில்—வெகு
வேகத்தில் செல்லும்
மானமோ? பூவி
தானமோ?—எனத்

சந்தம் சயி.

தங்க லாயினேன் சிலஇடம்;
(விசை) முங்கலாயினேன் சில இடம்.

VII

(சந்தம் யசூ.)

1. i பிரமன் சிருஷ்டி பிறழவே,
மயன் செய் மாற்றம் மருளவே,
ii வாயு வாடிமெய் சோரவே,
தீயின் கைதடு மாறவே,
iii ஓவியன் தொழில் உலையவே,
உயர் இஞ் சினியர் மலையவே,
iv புதுப்புது உருவம் புனையுவேன்;
போக்கி வேறுரு வனையுவேன்.

சந்தம் சயிக.

2. i செப்படி வித்தகன்
அப்படி இப்படி
ஒப்பிடு பொருள் என
மெய்ப்படப் பலவுருக் காட்டுவேன்;—களிப்
பூட்டுவேன்;
ii மாடமும் கூடமும்
மாளிகை மண்டப
மேடையும் முன்றிலும்
வீதி சதுக்கமும் காட்டுவேன்;—களிப்
பூட்டுவேன்;

iii மாவொடு யானையும்
மானொடு பூனையும்
ஆவொடு வாவலும்
பூவொடு சேவலும் காட்டுவேன்;— களிப்
பூட்டுவேன்;

சந்தம் சயஉ

i மீனிரை உந்தி
பால்நுரை சிந்தும்
வாருணம் ஒருபால் காட்டுவேன்;

ii மலர் நிரை பம்பும்
இலை செறி கொம்பின்
பலமரம் ஒருபால் காட்டுவேன்;

iii மறை தரக் கூத்தர்
விரை தரத் தூக்கும்
திரை பல ஒரு பால் காட்டுவேன்;

(சந்தம் க.)

3. மண்டு வீரர் கைக் கொண்ட வாளொடு
அண்டமர் தொடுத் தெண்டிசாமுகம்
பிண்டிட, உயிர் உண்டிடத், தண்டில்
கொண்ட சீற்றமும் அண்டுரு விதம்
கோபிப்பேன்; திறம்—பாவிப்பேன்;

சந்தம் சயரு.

i மல்லில் புல்லியே வாட்டுவேன்;— திறங்—
காட்டுவேன்;

ii விற்களைப் பொடித் தாட்டுவேன்;— திறம்—
பூட்டுவேன்;

iii பற்களைக் கடித் தோட்டுவேன்;— திறம்—
நாட்டுவேன்;

சந்தம் சயஃச.

4. i மடமடவென இடித்து ஒருபுறம்,
நெறு நெறுவென நெறித்து மறுபுறம்,

ii கடகடவெனக் கதறி ஒருபுறம்,
கலகலவெனக் கதறி மறுபுறம்,

(சந்தம் ௩.)

காதில் பெய்திடும்
ஓதை யாவுமே
மேதினி வரை
யாது கொண்டிட

சந்தம் சயரு.

வழங்குவேன்;— என்னிசை நானே
முழங்குவேன்.

VIII

(சந்தம் யகூ.)

1. i அருவி மாமழை முழங்கவே,
குருவி வாச்சியம் குழங்கவே,
வெருவிப் பாம்பு வெதும்பவே,
வீயிணர் சினை ததும்பவே,

ii கல்லும் மண்ணும் கசியவே,
கானும் கரையும் பசியவே,
புல்லும் பூடும் களிக்கவே,
புலத்தில் ஞெண்டும் ஒளிக்கவே,

iii மரமும் கொடியும் தளிரவே,
மலரில் வர்ணம் ஒளிரவே,
சிரமும் மாந்தர் நிமிரவே,
திக்கில் பல்லியம் குமுறவே,

iv மல்லிகை வாசம் வீசவே,
வண்டோ மலருள் மூசவே,
அல்லி தாமரை புல்லவே,
அசையில் மரை இரை மெல்லவே,

v மந்தி பந்தியாய்க் குந்தவே,
வாடையோ குளிர் சிந்தவே,
சந்திவழியன வாகவே,
தாகப்பிணியற் றேகவே,

vi மயிலாம் கணிகையர் ஆடவே,
மதகோ மத்தளம் போடவே,
குயில் கூவாதுளம் வாடவே,
கூத்தர் சோம்பலைக் கூடவே,

vii வளையில் தவளை ஒலிக்கவே,
வயல் முப்போகம் பலிக்கவே,
முழையுள் வல்லியம் ஒடவே,
முதியர் விரைத்துடல் மூடவே,

viii சேற்றில் ஆமை புதையவே,
சிறுமியர் சிற்றில் சிதையவே,
நாற்றைக் கடைசியர் பிடுங்கவே,
நாங்கூழ் மண்ணு ளொடுங்கவே,

ix மானும் முயலும் குதிக்கவே,
மையல் மாதருள் உதிக்கவே,
தேனும் தாதும் செழிக்கவே,
செய்யணை எலாம் அழிக்கவே,

x உழவர் கலப்பை எடுக்கவே,
ஊருணி குட்டம் மடுக்கவே,
விழவில் கூட்டம் சிதறவே,
வெறுங்கை மாந்தர் பதறவே,

xi சிறுவர்கள் குளத்தில் நீந்தவே,
சினைமீன் நீர்த்துளி மாந்தவே,
கராம் அலையிடையே மூங்கவே,
கரும்பென நெல்லும் பொங்கவே,

xii குளமும் ஓடையும் சிரிக்கவே,
கூலவணிகர்கை நெரிக்கவே,
களமும் போரினால் நிறையவே,
களைத்தோர் களைப்பற மறையவே,

xiii சீரும் சிறப்பும் பெருகவே,
தேமொழியார் கண்ணீர் உருகவே,
ஆறும் ஏரியும் ஆர்ப்பவே,
அழகெப்பாங்கரும் போர்ப்பவே, —ஆக்கி

(சந்தம் ரு.)

ஆக்கி நீரினைத்
தேக்கி மன்னுயிர்
தாக்கு துயரம் பா
ழாக்குவே னன்றோ?

IX

சந்தம் சயசூ

வாடின பயிரின் வாட்டம் தீர்த்துறும்
மருத்துவன் யானே;
ஊடின மாதர் சூடின பூப்புனை
ஓவியன் யானே;
நாடின மயிலோர் நடம்பயில் தரவரு
நட்டுவன் யானே;
பாடின பாட்டில் பண்ணைப் புகட்டும்
பாகவதன் யானே;

(சந்தம் ௩.)

1. i கூலிக் காரன் போல்
வேலை பற்பல
மூலை முக்கெல்லாம்—தேடிச் செய்வனே;

ii குடை கவித்திடும்
நடையில் வேந்துபோல்
குடிகள் குடிசெய — நாடிப் பெய்வனே;

iii துன்னுயிர் அழுக்
கின்னலம் கெட
அன்னைபோல யான்—ஆட்டி மகிழ்வனே;

iv அத்தன் போல் அரும்
பித்தம் மக்களில்
தத்துரு விதம் — ஒட்டி நெகிழ்வனே;

(சந்தம் சயஉ.)

2. சிறியன செய்வேன்;
வறியன வணேவேன்;
பெரியன பிணிப்பேன்;
அரியன அமைப்பேன்;

(சந்தம் ய.)

யார்தாம் எனக்கு நிகராவர்?
எவர்க்கும் நானே மேலாவேன்.

X

சந்தம் சயஎ.

1. i சிறுதூற்றல் விழச் சிணுங்கிடுவேன்;- மாகச்
செவிலித்தாய் இடம் பிணங்கிடுவேன்;— நீரற்
றுணங்கிடுவேன்;— பின்னர்
இணங்கிடுவேன்;

ii பெருமழை பொழிதர அழுதிடுவேன்;-குருப்
பிறங்கல் இறங்கித் தொழுதிடுவேன்;- தாளை
உழுதிடுவேன்;- மணல்
எழுதிடுவேன்;

iii கோபித்திடியில் குமுறிடுவேன்;- கூட
கோபுரத்தோடு அமரிடுவேன்;-பொடித்
தமரிடுவேன்;- பொடி
திமிரிடுவேன்;

iv மின் கண் இடைக்கிடை சிமிட்டுவேன்;-எந்நா
வேண்டாப்பொருளைக் குமட்டிடுவேன்;-தள்ளிச்
சமட்டிடுவேன்;- மைப்போல்
நிமிட்டிடுவேன்;

v பையக் காலொடு பேசிடுவேன்;- மேனி
பாகம் தோய்தரப் பூசிடுவேன்;- சற்று
கூசிடுவேன்;- ஊடி
ஏசிடுவேன்.

(சந்தம் ௩௰௩.)

2. முளையில் முளைத்துத் தளிரில் ஒசிவேன்;
கிளையில் கிளைத்து இலையில் பசிவேன்;
அரும்பில் அரும்பி மலரில் மலர்வேன்;
காயில் காய்த்துக் கனியில் கனிவேன்;

(சந்தம் ௰.)

கொடியில் ஓடிப் படர்வேனே;
செடியில் மூடி அடர்வேனே;
கடியில் வார்ந்து பனிப்பேனே;
கரும்பில் ஊர்ந்து இனிப்பேனே.

(சந்தம் ௩௰௫.)

3. எறும்பில் ஊர்ந்து, முயலில் பாய்ந்து,
எருந்தில் தத்தி ஏறுவேன்;
சுரும்பில் முரன்று, களிற்றில் பிளிறி,
அரவின்பத்தி சீறுவேன்;

(சந்தம் ௨௰௬.)

வளையில் ஊதிட மலர் அர்ச்சிப்பேன்;
வயமார்த் தொண்டையில் யான் கர்ச்சிப்பேன்;

சந்தம் ௪௰௮.

ஓடை பேசவே,
வாடை வீசவே,
காடு தளிரவே,
ஏடு ஒளிரவே,
அருவி தாவவே,
குருவி கூவவே,
வரைகள் மூடவே,
மரைகள் ஓடவே,

(சந்தம் ௨௰௭)

177029

யான் உள்ளுறைவேன்;
யான் உள்ளுறைவேன்.

சந்தம் ௪௰௯

4. தென்றலேமடி தேம்பியழக்குளிர்சிறிதுபோட்டுவேன்
கன்றிலருந்தாய் கசியக் கசியக் கலப்பால் ஊட்டுவேன்

(சந்தம் ௨௰௮.)

பாடுனர் நாவில் பாடுவோன் யானே,
ஆடுனர் காலில் ஆடுவோன் யானே.

சந்தம் ௫௰.

என்னுருவும் என்செயலும் எடுத்தோதல் அரிய
ஈசன் உருச் செயல்போல எவற்றின் மேற் பெரிய.

புஸ்தக விளம்பரம்.

மனோன்மணீயம் ஓர் சிறந்த நவரச நாடகம்	2	8	0
மேகமாலை			
மேக சஞ்சாரத்தின் இயற்கை வருணனை	0	4	0
நளவெண்பா மூலம்	0	8	0
,, உரையுடன்	2	0	0
நைடதம் மூலம்	1	0	0
,, மூலமும் உரையும் ...	3	0	0
குசேலோபாக்யானம் மூலம் ...	0	12	0
,, மூலமும் உரையும் ...	3	8	0
சிவப்பிரகாச முனிவர் பிரபந்தத்திரட்டு ...	2	0	0
குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு	8	0	3
மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு	5	8	0
கம்பராமாயணம் பாலகாண்டம் மூலம் ...	2	0	0
,, மூலமும் உரையும் ...	5	0	0
கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் மூலம்	2	0	0
,, மூலமும் உரையும்	5	0	0
கம்பராமாயணம் ஆரண்யகாண்டம் மூலம்	2	0	0
,, மூலமும் உரையும்	3	8	0
கம்பராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் மூலம்	2	0	0
,, மூலமும் உரையும்	4	8	0
கம்பராமாயணம் சுந்தரகாண்டம் மூலம்	2	0	0
,, மூலமும் உரையும்	5	0	0
கம்பராமாயணம் யுத்த காண்டம் மூலம்	5	0	0
வில்லிபாரதம் அரும்பத உரையுடன்	4	0	0
திருக்குறள் மூலம்	0	8	0
,, மூலமும் பரிமேலழகர் உரையும்	4	0	0
நாலடியார் உரை	2	0	0
இராமாயண வசனம் 8 வால்யூம் ...	16	0	0
பாரத வசனம் 2 வால்யூம் ...	7	0	0
பாகவத வசனம் 8 வால்யூம் ...	16	0	0
பக்த விஜயம்	6	0	0
முத்தையா பவுண்டன் பேனா, 14 காரட் தங்க நிப்பு உள்ளது, நல்ல இரிடியம் உள்ளது, சேப்டி. வெகு காலம் உழைக்கக்கூடியது. சிவப்பு, கறுப்பு இரண்டு நிறத்திலும் இருக்கிறது.	2	8	0

S. முத்தைய பிள்ளை, புஸ்தக வியாபாரம்,

திருநெல்வேலி ஜங்ஷன்.